**அ.வ.எண். 37/2024**

**நாள் – 19.02.2025**

**பிரதிவாதி – பரமசங்கர் –த/பெ. முருகேசன்**

**கட்டளை 10ன் கீழ் பதிவு செய்யும் பிரதிவாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. வாதியின் கணவருக்கும், எனக்கும் என் தாத்தா தான் உயில் எழுதினார். அந்த உயில் ஆவணத்தை நானோ, வாதியின் கணவரோ மறுக்கவில்லை. உயில் ஆவணத்தில் கண்ட 4 வது இலக்க சொத்தானது எனக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும்.

2. உயில் ஆவணப்படி என் சொத்தை எனக்கு அளந்து கொடுக்கும் போது நான் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பதாக தெரிந்தால் வாதிக்கு இழப்பீடாக வேறு ஒரு இடத்தில் வாதி கேட்கும் இடத்தில் இடம் தர தயாராக உள்ளேன். உயில் படி என் இடத்தையும் , வாதி இடத்தையும் தனித்தனியாக அளந்து கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை. உயில் படி அளந்தால் எனக்கும், வாதிக்கும் உள்ள பிரச்சனையில் சமரசம் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.